விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 19 சனி 04.09.2021 மலர் - 2, இதழ் - 151

# ஜல்லிக்கட்டில் நாட்டு மாடுகள்


விஜயபாரதம்

ஜல்லிக்கட்டில் நாட்டு இன மாடுகளை மட்டும் அனுமதிக்க உத்தரவிட வேண்டும். வெளிநாட்டு, கலப்பின மாடுகள் பங்கேற்க தடை விதிக்க வேண்டும் எனவும் கோரி சென்னை துரைப்பாக்கத்தைச் சேர்ந்த சேஷன் என்பவர் மனு தாக்கல் செய்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஜல்லிக்கட்டு போட்டிகளில் நாட்டு மாடுகளை மட்டுமே அனுமதிக்க வேண்டும். வெளிநாட்டு மாடுகள், கலப்பின மாடுகளை பங்கேற்க அனுமதிக்கக் கூடாது. ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் மாடுகள் நாட்டு மாடுகள் என கால்நடை மருத்துவர்கள் சான்றளிக்க வேண்டும். பொய் சான்றிதழ் அளித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கலாம். நாட்டு மாடுகள் இனப்பெருக்கத்துக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். மாடுகளுக்கு செயற்கை கருத்தரித்தல் முறையை தவிர்க்க வேண்டும் என தமிழக அரசுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# இது தி.மு.க. ஆட்சிடா


விஜயபாரதம்

விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட தடை விதித்த தமிழக அரசை கண்டித்தும், அரசுக்கு நல்ல புத்தியை இறைவன் வழங்க வேண்டும் என்றும் வேண்டி, காஞ்சிபுரம் பேருந்துநிலையம்அருகேயுள்ளசங்குபாணி விநாயகர் கோயில் வாசலில் விநாயகர் துதி பாடி, இந்து முன்னணியினர் அறவழிபோராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, கோயில் வாசலில் தேங்காய், பழக் கடை வைத்திருக்கும் கடையின் உரிமையாளர் பூபதி, இந்து முன்னணியினர் ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அத்திவரதர் புகைப்படத்தில் செருப்பை சொருகி வைத்திருந்தார். இது குறித்து இந்து முன்னணியினர் பூபதியிடம் கேட்டபோது, "நான் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவன். இது தி.மு.க ஆட்சிடா, அப்படித்தான் செய்வேன்" என திமிராகக் கூறியுள்ளார். இதனால் அங்கு சர்ச்சை வெடித்து கைகலப்பு ஏற்பட்டது. அப்போது பூபதி பூ அறுக்கும் கத்தியால் இந்து முன்னணி பிரமுகர் சதிஷ் என்பவரின் கையை கிழித்துள்ளார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர், பூபதியை காவல்நிலையம் அழைத்து சென்றனர். இந்து முன்னணியினர் சிவகாஞ்சி காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். இதனையெடுத்து பூபதியை கைது செய்த காவல்துறையினர், மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காஞ்சிபுரம் கிளை சிறையில் அடைத்தனர்.

# உண்ணாவிரத போராட்டம்

விஜயபாரதம்

ஹிந்து மக்களின், பக்தர்களின் சார்பாக, தமிழகத்தில் பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபட அனுமதிக்கக் கோரியும், வழிபாட்டை தடை செய்த தமிழக அரசை கண்டித்தும் இந்து முன்னணி அமைப்பு, அதன் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் தலைமையில், சென்னையில் செப்டம்பர் 6ம் தேதி உண்ணாவிரத அறப்போர் அறிவித்துள்ளது.

# 100 நாளில் 3,338 மனுக்கள்




விஜயபாரதம்

ஹிந்து சமய அறநிலையத் துறை அலுவலகத்தில் சமீபத்தில் 'கோரிக்கைகள் பதிவிடுக' எனும் இணைய திட்டமும் பக்தர்கள் குறைகேட்பு சிறப்பு மையமும் துவக்கப்பட்டது. இவற்றில் பெறப்படும் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதில், கடந்த 100 நாட்களில் 3,338 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 95 மனுக்கள் மீது நடவடிக்கைகள் முழுமை அடைந்துள்ளது. 1,615 மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 78 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இவற்றில், திருப்பணிகள், ஆக்கிரமிப்புகள் குறித்த புகார்கள்தான் அதிகம் வந்து உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகம் இரண்டாமிடம்

மத்திய அரசின், 'உதயம்' இணையதளத்தில், 2020 ஜூலை 1 முதல் மத்திய அரசு திருத்தியமைத்த சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் வகைப்படுத்தலுக்கான அளவுகோல்களை ஒட்டி, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டும். இதில், தமிழகத்தில், 2020 ஜூலை 1 முதல், 2021 ஜூலை 31 வரை, நான்கு லட்சத்து 1,319 தொழில் நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. இவற்றின் மூலம் வாயிலாக, 53 ஆயிரத்து 801 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 41.69 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் உள்ள சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் தேசிய அளவில் இரண்டாவது அதிக எண்ணிக்கையில் உதயம் இணையதளத்தில் பதிவு செய்தவர்களை கொண்டுள்ளது.

விஜயபாரதம்



# பொம்மையல்ல ஹிந்துக்களின் உணர்வு



விஜயபாரதம்

கொரோனாவை காரணம் காட்டி விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பொது இடங்களில் சிலை வைக்கத் தடை, விநாயகர் சிலைகள் ஊர்வலத்திற்குத் தடை, நீர்நிலைகளில் சிலைகளைக் கரைக்கத் தடை என ஹிந்து விரோத மனப்பான்மையுடன் தி.மு.க அரசு செயல்படுகிறது. இதற்கு ஹிந்து முன்னணி, பா.ஜ.க உள்ளிட்ட அமைப்புகள், கட்சிகள், பொதுமக்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். போராட்டங்களும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், பா.ஜ.க பிரமுகர் காயத்ரி ரகுராம் இது தொடர்பாக வெளியிட்ட டுவிட்டர் பதிவில், "விநாயகர் சதுர்த்தி உதயநிதிக்கு வேண்டுமென்றால் வெறும் ஒரு மண் பொம்மையாக இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு ஹிந்துகளும் நம்பும் கலாச்சாரம், பண்பாடு, உணர்வு, ஒற்றுமையுடன் விநாயகர் சதுர்த்தி பண்டிகையை நாங்கள் கொண்டாடுகிறோம். தி.மு.க கோடிக்கணக்கான தமிழக மக்களை காயப்படுத்த தீய கொள்கையை திணிக்கிறது," எனக் கூறியதுடன், #DMKFails என்ற ஹேஷ்டேக்கையும் குறிப்பிட்டுள்ளார்.

# மூலிகை வளர்ப்புக்கு உத்வேகம்



விஜயபாரதம்

ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய மருத்துவ தாவரங்கள் வாரியம் (NMPB) 75வது சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக பாரதத்தில் மருத்துவ தாவரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, நமது நாட்டில் அடுத்த ஆண்டிற்குள் 75,000 ஹெக்டேர் நிலத்தில் மூலிகை பயிர்களை வளர்ப்பது குறித்த தேசிய பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது. இதனையொட்டி விவசாயிகளுக்கு இலவசமாக பாரிஜாதம், வில்வம், நாவல், வேம்பு, அஸ்வகந்தா உள்ளிட்ட மூலிகை செடிகள் வழங்கப்பட்டன. இதில் பேசிய மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால், '75,000 ஹெக்டேரில் மூலிகைகள் வளர்ப்பது பாரதத்தில் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும். விவசாயிகளுக்கு வருமான ஆதாரமாக இருக்கும். பசுமை பாரதக் கனவை நனவாக்கும். பாரம்பரிய மருத்துவத்தில் தன்னிறைவு பெற உதவும். கடந்த 1.5 ஆண்டுகளில், மூலிகைத் தாவர சந்தை பாரதத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் அதிகரித்துள்ளது. அஸ்வகந்தா இப்போது அமெரிக்காவில் அதிகம் விற்பனையாகும் பொருட்களில் மூன்றாவது இடத்தில் உள்ளது' என்றார்.

# லடாக்கில் போர் பயிற்சி



விஜயபாரதம்

பாரத ராணுவம் லடாக் பகுதியில் மாபெரும் போர் பயிற்சியை மேற்கொண்டுள்ளது. நமது ராணுவத்தின் XIV கோர் அல்லது பயர் அன்ட் பியூரி கார்ப்ஸ் படைப்பிரிவினர் இந்த ஒருங்கிணைந்த போர் பயற்சியை லடாக்கில் மேற்கொண்டுள்ளனர். இந்த பயிற்சியை பயர் அன்ட் பியூரி கோர் படைப் பிரிவின் கமாண்டர் பிஜிகே மேனன் நேரில் பார்வையிட்டார். நேரடி தாக்குதல் முறையில் உண்மையான குண்டுகளை வீசி இந்த பயிற்சி நடைபெற்றுள்ளது. எல்லையில் பாகிஸ்தான், சீனா என இறுபுறமும் பிரச்சனைகள் தொடரும் சூழலில் நடைபெறும் இந்த பயிற்சி முக்கியத்துவம் பெறுகிறது. மேலும், சீனாவுடன் எல்லை பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை வகிப்பவர் பி.ஜி.கே மேனன்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# வழிகாட்டும் கேரள பஞ்சாயத்து

கேரளாவின் பாலக்காட்டில் உள்ள மாத்தூர் கிராம பஞ்சாயத்தில் சமீபத்தில் புதிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது. அதற்கு, கம்யூனிஸ்ட் மற்றும் பா.ஜ.க உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு அளித்துள்ளனர். அத்தீர்மானத்தின்படி இனி பஞ்சாயத்து அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளை மக்கள், 'சார், மேடம்' என, அழைக்கத் தேவையில்லை. அவர்களை பெயரைச் சொல்லியோ, பதவியைச் சொல்லியோ அழைக்கலாம். வயதில் மூத்தவராக இருந்தால், 'சேட்டன், சேச்சி' என அழைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே இது போன்ற ஒரு முன்மாதிரி தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள முதல் பஞ்சாயத்து இது. மேலும், ஜனநாயகத்தில் மக்களே எஜமான்கள். மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அவர்களுக்கு சேவை புரிபவர்கள். அதனால் இனி மக்கள் கோரிக்கையுடன் அல்ல, அவர்களின் உரிமையை கேட்டு வர வேண்டும். எனவே, சேவைக்கான படிவங்கள் இனி உரிமை படிவம் என்றே இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# நீதிமன்ற கருத்துக்கு வரவேற்பு



விஜயபாரதம்

பசுக்களை பாரதத்தின் தேசிய விலங்காக அறிவிக்க வேண்டும் என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. அதன் பாதுகாப்பு ஹிந்து சமூகத்தின் அடிப்படை உரிமைகளின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. பசுக்களை மதத்தோடு பொருத்தி பார்க்காமல், பசுவை காப்பாற்றுவது ஒவ்வொரு குடிமகன் கடமை. மாட்டிறைச்சி உண்பது அடிப்படை உரிமை அல்ல. பசுவை வழிபடுபவர்கள் அதனை பொருளாதார ரீதியாக நம்பியிருப்பவர்களுக்கும் அடிப்படை உரிமைகள் உண்டு என தெரிவித்தது. பஞ்சாப்பின் கோ சேவா கமிஷன், முஸ்லிம்களின் பழம்பெரும் மதரசாவான பிராங்கி மெஹல் மதரஸா உள்ளிட்ட அமைப்புகள் இதற்கு பெரும் வரவேற்பு தெரிவித்துள்ளன.

# காலத்தின் கொடுமை


மேற்கு வங்காளத்தில் ஹிந்துக்களால் நவராத்திரி விஷேஷமாகக் கொண்டாடப்படும். வீதிக்கு வீதி துர்கை சிலைகள் வைத்து வழிபாடு செய்யப்படும். மேற்கு வங்க முதல்வரும் திருணமூல் கட்சித் தலைவருமான மமதா பானர்ஜி ஆட்சியில் நடைபெறும் ஹிந்துக்கள் மீதான அடக்குமுறைகள், கொலைகள், முஸ்லிம்களின் மீதான அதீத பாசம் அனைவருக்கும் தெரிந்ததே. சமீபத்தில் தேர்தலுக்குப் பிறகு இவரது கட்சியினர் நடத்திய வன்முறைகளும் அதற்கு மமதா அளித்த ஆதரவும் அனைவரும் அறிந்ததே. இது குறித்து தற்போது நீதிமன்றத்தின் மேற்பார்வையில் சி.பி.ஐ, எஸ்.ஐ.டி அமைப்புகள் விசாரணை நடத்தி வருகின்றன. இந்நிலையில், மமதாவை துர்கையாக சித்தரித்து சிலைகளை வைக்க மூன்று கமிட்டிகள் முடிவு செய்துள்ளன. 'நஸ்ருல் பார்க் உன்னயன்' சமிதியின் துணைத் தலைவர் பார்த்தா சர்க்கார், 'மேற்கு வங்கத்தினர் மமதாவை துர்கா தேவியாகக் கருதுகின்றனர். அவர் மக்களுக்கு செய்த நன்மைகளை உலகில் வேறு யாரும் செய்ததில்லை' என கூறியுள்ளார். அரசியல், அதிகார செல்வாக்கால் நடைபெறும் இது போன்ற கேலிக்கூத்துக்கள், ஹிந்துக்களை வேதனைப்படுத்தியுள்ளது.

விஜயபாரதம்





# ரயிலில் உள்ளாடையுடன் எம்.எல்.ஏ



விஜயபாரதம்

பிகாரின் ஐக்கிய ஜனதாதள சட்டமன்ற உறுப்பினர் கோபால் மண்டல், ரயிலில் உள்ளாடைகளுடன் மட்டும் சுற்றித் திரிந்தது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் 'எனக்கு வயிறு சரியில்லை அதனால்தான் உள்ளாடையுடன் இருந்தேன்' என அதற்கு காரனம் கூறியுள்ளார். அவரது கோலத்தை கண்ட சக ரயில் பயணிகள் அவரை ஆடை உடுத்துமாறு கூறியதற்கு அவர்களை சுட்டுக்கொன்றுவிடுவேன் என மிரட்டியுள்ளார் கோபால் மண்டல். பின்னர், ரயில்வே காவலர்கள், டிக்கெட் பரிசோதகர்கள் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தியதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.


# வாட்ஸ் அப்பிற்கு அபராதம்

விஜயபாரதம்

வாட்ஸ் ஆப் செயலி தனது பயனர்களின் விவரங்களை அதன் தாய் நிறுவனமான முகநூல் உள்ளிட்ட செயலிகளுடன் பகிர்ந்து கொள்வதாகவும் தனியுரிமை விதிகளை மீறுவதாகவும் உலகம் முழுவதும் குற்றச்சாட்டு உள்ளது. இது தொடர்பாக அயர்லாந்தில் நடத்தப்பட்ட விசாரணையில் வாட்ஸ் ஆப' நிறுவனத்துக்கு 50 மில்லியன் யூரோ அபராதம் விதிக்கப்பட்டது. இது குறைவான அபராதம் என ஐரோப்பிய ஒழுங்குமுறையாளர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, அயர்லாந்து நாட்டின் தகவல் பாதுகாப்பு ஆணையம் அந்த அபராதத் தொகையை 225 மில்லியன் யூரோவாக (சுமார் 1950 கோடி ரூபாய்) அதிகரித்துள்ளது. இந்த அபராதம் மிகவும் அதிகம். இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் என வாட்ஸ் ஆப் கூறியுள்ளது.

# நேபாள சீன எல்லைப் பிரச்சனை

சீனா கடந்த ஆண்டு நேபாளின் ஹும்லா மவட்டத்தில் நிலத்தை ஆக்கிரமித்து ஒன்பது கட்டிடங்களை கட்டியது. நேபாள காங்கிரசின் மாகாண சட்டமன்ற உறுப்பினர் ஜீவன் பகதூர் ஷாய் இந்த ஆக்கிரமிப்பு குறித்து ஆதாரங்களுடன் பேசியபோது, முன்னாள் பிரதமர் கே.பி சர்மா ஒலி'யின் அரசு அதனை நிராகரித்தது. இந்நிலையில், தற்போது நேபாள புதிய பிரதமர் ஷேர் பகதூர் தியூபாவின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சீனாவுடனான ஹும்லா உள்ளிட்ட எல்லை தகராறுகளைப் ஆய்வு செய்ய உள்துறை அமைச்சக இணைச் செயலாளர் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழுவை அமைத்தது. இக்குழுவினர் சர்ச்சைக்குரிய பகுதிக்குச் நேரில் சென்று ஆய்வு செய்து அரசிற்கு அறிக்கை அளிப்பார்கள் என்று சட்டம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் ஞானேந்திர பகதூர் கார்க்கி கூறினார்.



விஜயபாரதம்

# ஹமாசின் ரகசிய சுரங்கம்



விஜயபாரதம்

எகிப்து பாலஸ்தீனின் காசா பகுதிக்கு இடையே ஹமாஸ் பயங்கரவாதிகள் சுரங்கப்பாதைகள் அமைத்து உணவு, எரிபொருள், ஆயுதங்கள், வெடிமருந்துகளை கடத்துகின்றனர். சமீபத்தில் எகிப்து காசா எல்லையில் இத்தகைய சுரங்கத்தை எகிப்திய ராணுவத்தினர் கண்டுபிடித்தனர். அதில் நச்சுவாயுவை செலுத்தினர். பாலஸ்தீனிய பயங்கரவாதிகள் மூவர் இதில் இறந்தனர். பலியானவர்கள் சுரங்கப்பாதை தொழிலாளர்கள் என ஹமாஸ் கூறியுள்ளது. ஹமாஸ் பயங்கரவாதிகளின் கடத்தலைத் தடுக்க எகிப்து 2009ல், காசாவின் எல்லையில் 4 கி.மீ., இரும்பு தடுப்புகளை அமைத்தது. 2010ல், எகிப்தியப் படைகள் இத்தகைய சுரங்கங்களில் ஒன்றில் எரிவாயுவை செலுத்தி 4 பாலஸ்தீனியர்களைக் கொன்றது. கடந்த மே மாதம், இஸ்ரேலில் ஹமாஸ் பயங்கரவாதிகள் நடத்திய ராக்கெட் வெடிகுண்டுத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் . 'ஹமாஸ் மெட்ரோ' என அழைக்கப்படும் இந்த சுரங்கங்களில் பலவற்றை இஸ்ரேல் குண்டு வீசி அழித்தது.

---



விஜயபாரதம்

# கொடுங்கோல் சீனா

சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட திபெத்தில் உள்ள டிஸா வோன்போ டவுனில் ஆகஸ்ட் 22 அன்று 200 சீன ராணுவ வீரர்கள், திடீரென வீடுகள், புத்த மடாலயங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதில் 19 துறவியர் உட்பட 50 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை இதுவரை ராணுவம் விடுவிக்கவில்லை, குடும்பத்தினரை சந்திக்கவும் விடவில்லை. இதற்கு காரணம், அவர்கள் அனைவரும் நாடுகடத்தப்பட்ட ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவின் புகைப்படங்களை அவர்களின் அலைபேசிகளில் வைத்திருந்தார்கள், ஆன்லைனில் வெளியிட்டார்கள், வீடுகளிலும் மடங்களிலும் வைத்திருந்தனர் என்பதுதான். அதன் பிறகு ஆகஸ்ட் 25ல் 'மக்கள் சந்திப்பு' என்ற ஒரு கூட்டத்தை ராணுவத்தினர் நடத்தினர். அதில், தலாய் லாமாவின் புகைப்படங்களை யாரும் வைத்திருக்கக்கூடாது. அது குறித்து எந்த சமூக வளைத்தளத்திலும் பேசகூடாது. திபெத் குறித்த எந்த செய்திகளையும் வெளியிடக்கூடாது. மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியை மட்டுமே பின்பற்ற வேண்டும். சீன அரசின் சட்டங்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்ற ஐந்து உத்தரவுகள் பிறப்பித்தனர்.

# மாடர்னா தடுப்பூசி நிறுத்திய ஜப்பான்




விஜயபாரதம்

ஜப்பானில் கொரோனா தடுப்பூசியாக அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட மாடர்னா தடுப்பூசி பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில், அங்கு மாடர்னா தடுப்பூசி செலுத்தும் பணியின் போது, மருந்து குப்பிக்குள் கருப்புத் துகள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து சுமார் 10 லட்சம் தடுப்பூசி மருந்துகளை மக்களுக்கு செலுத்தாமல் ஜப்பான் அரசு நிறுத்தி வைத்து உள்ளது. இது பார்க்க உலோகத்தின் துகள்கள் போன்று உள்ளது. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. எனினும், அமெரிக்காவின் பைசர், மாடர்னா, இங்கிலாந்தின் அஸ்ட்ராஜெனெகா ஆகிய மருந்துகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாடர்னா தடுப்பூசி போட்ட யாருக்கும் எந்தவிதமான பிரச்சினைகளும் இதுவரை ஏற்படவில்லை. எனினும் விசாரணைக்கு பிறகே அவற்றை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# தலிபான்களின் திட்டம்

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள், உலக நாடுகளுடன் சுமூக உறவை உருவாக்க முயற்சிப்பதைப் போன்று காட்டிக் கொண்டு வருகின்றனர். குறிப்பாக, ஆசிய பிராந்தியத்தில், சீனா, பாரதம், பாகிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்த விரும்புவதாக பலமுறை கூறிவிட்டனர். இதற்காக பேச்சுவார்த்தை நடத்த பாரதத்திற்கு அழைப்பு விடுத்தனர். அதனையடுத்து கத்தாரில் தலிபான் பிரதிநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது, ஆப்கன் மண்ணை பயங்கரவாதத்திற்கும், பாரதத்திற்கு எதிரான செயல்களுக்கும் பயன்படுத்தக் கூடாது என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், முன்னதாக, காஷ்மீர் விவகாரத்தில் தலையிடமாட்டோம் என்று கூறிய தலிபான்கள், தற்போது காஷ்மீரிலோ அல்லது வேறு எந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்காகவோ குரல் கொடுப்பதற்கு தலிபான்களுக்கு உரிமை உள்ளது என தெரிவித்துள்ளனர். இதன் மூலம், காஷ்மீர் விவகாரத்தில் தலையிடுவோம் என்பதையே தலிபான்கள் மறைமுகமாக கூறியுள்ளதாகவே கருதப்படுகிறது. இது தற்போதுதான் அமைதியாக வாழ ஆரம்பித்திருக்கும் காஷ்மீர் மக்களுக்கும் மத்திய அரசுக்கும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



# பயங்கரவாதி சுட்டுக்கொலை

விஜயபாரதம்

நியூசிலாந்தின் ஆக்லாந்து பகுதியில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதி கத்தியால் தாக்கியதில் 6 பேர் காயமடைந்தனர், 3 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். அவனை கண்காணித்த காவலர்கள், கத்தியால் அவன் தாக்க துவங்கிய உடனேயே அவனை சுட்டுக் கொன்றனர். சுட்டுக்கொல்லப்பட்ட பயங்கரவாதி, 2011ல் இலங்கையில் இருந்து நியூஸிலாந்து வந்தவன். அவனது ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத கொள்கை காரணமாக கண்காணிப்புப் பட்டியலில் இருந்தான். கடந்த 2016ல் பொது மக்களை தாக்க திட்டமிட்ட வழக்கில் சிறை சென்றவன். தற்போதும் பொது மக்களை கொல்லும் நோக்கத்திலேயே தாக்கினான். நீதிமன்ற உத்தரவு காரணமாக கொல்லப்பட்ட பயங்கரவாதி பற்றிய தகவலை வெளியிட முடியாது என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் கூறினார்.

# வலையில் சிக்கிய மீம்கள்




தொற்று குறைந்ததால்
பள்ளிகள் திறப்பு.....
தொற்று இருப்பதால் விநாயகர்
சதுர்த்திக்கு தடை...
என்னடா பித்தலாட்டம் இது..?


திராவிடம்னா என்ன'ப்பா?
ஈழம் காப்போம்ன்னு சொல்லி, அவங்களை கைவிட்டு..
ஹிந்தி ஒழிப்போம்'னு சொல்லி அவங்க குடும்பம் படிச்ச, அவங்க நடத்துற ஸ்கூல்ல சொல்லித்தந்து...
ஆரியம் ஒழிப்போம்'னு சொல்லி அவங்க மட்டும் நல்லா இருக்க ஐயர்களை கூப்பிட்டு யாகம் செஞ்சிட்டு....
அவங்க மட்டும் நல்லா இருக்கனும், மத்தவங்க நாசமா போகனும்'னு நினைக்கிறதுதான்மா திராவிடம்!!!

# தாதாபாய் நௌரோஜி



விஜயபாரதம்

மதம், மொழி, இன பேதமற்ற ஒன்றுபட்ட தேசியம் மற்றும் வறுமையை அகற்றும் தேசியப் பொருளாதாரம் என்னும் இரு உயர் லட்சியங்களை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே பாரத சமூகத்துக்குச் சொன்னவர் தாதாபாய் நௌரோஜி. வறுமையை ஒழிப்பதே பாரத தேசியத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். வல்லரசாக அல்ல, வறுமையற்ற தேசமாக பாரதம் உயர வேண்டும் என கனவு கண்டவர் நௌரோஜி.

ஆங்கில ஆட்சியில் பாரதத்தில் ஏற்பட்ட வறுமை, பஞ்சம், பட்டினிச் சாவுகளுக்கு காரணம் குறித்து ஆய்வு செய்தார். ஆங்கில அரசின் நிதி நிர்வாகத்துக்கும், பாரதத்தின் வறுமைக்கும் காரணமாக பாரதத்தில் ஆங்கில ஆட்சியில் நடந்தது ஆட்சி அல்ல, அது ஒரு பகல் கொள்ளை, பாரதத்தை பொருளாதார வேட்டை நிலமாக பிரிட்டன் மாற்றிவிட்டது. தொடர்ந்து நடந்த பொருளாதார வேட்டையின் காரணமாக நமது அரிய வளங்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன. ரத்த நாளங்களை வெட்டி ரத்தத்தை உறிஞ்சி எடுப்பதுபோல நமது வளங்களை, பிரிட்டன் வடித்தெடுத்தது. இதனை‘வடித்தெடுக்கும் கொள்கை’(ட்ரெய்ன் தியரி) என்ற பிரிட்டிஷ் ஆட்சி குறித்த புரிதலை தாதாபாய் நௌரோஜி ஏற்படுத்தினார்.

1867ல் அவர் எழுதிய ‘வறுமையும், பாரதத்தில் பிரிட்டிஷ் ஆட்சியும்’ என்ற நூல் பாரதத்திலும் இங்கிலாந்திலும் பெரும் அதிர்வுகளை உண்டாக்கியது. பொருளாதார விடுதலையை அரசியல் விடுதலைக்கு முன்னோடியாக எடுத்துச் சென்றார் தாதாபாய் நௌரோஜி. 1906ல் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் சுயராஜ்யம் தேசிய இயக்கத்தின் ஒரே லட்சியம் என அறிவித்தார் நௌரோஜி.

சுதேசி இயக்கம், அந்நியப் பொருட்களை ஒழித்தல் என்ற இரு புரட்சித் திட்டங்களை தேசிய இயக்கத்தில் முன்வைத்தார். சுயராஜ்யம் அரசியல் விடுதலைக்கானது. சுதேசி அந்நியப் பொருட்களை விலக்குவது, பொருளாதார விடுதலைக்கானது. சுதேசி இல்லாது சுயராஜ்யம் இருக்க முடியாது என்பது அவரின் மிகத் தெளிவான அணுகுமுறை. சுதேசி இல்லாத சுயராஜ்யம் உயிர் இல்லாத உடல் போன்றது என்பது காந்தியின் கருத்து. சுயராஜ்ய, சுதேசி இயக்கங்கள் வெகு ஜனங்களை இந்திய தேசிய இயக்கத்துக்குள் கொண்டுவந்தன. எளிய மக்களின் கவனத்தை அது ஈர்த்தது. விடுதலை இயக்கம் நாடு முழுவதுமான பேரியக்கமாக உருவாவதற்கான அடித்தளத்தை அவர் அமைத்தார்.